**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2023-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23-ம் நாள் வியாழக்கிழமை பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி உதவியாளர் திரு. சுவர்ணரத்தினக்குமார் என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | நாகராஜன் | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**23.11.2023 OS No.32/2021 பி.வா.சா.1** நாகராஜன் **ஆஜர்**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. இந்த வழக்கில் நான் 1-ம் பிரதிவாதி என்றால் சரிதான். தாவா வழக்கு சொத்தின் முழு உரிமையாளர் நான் என்றால் சரிதான். தாவா சொத்தை எந்த தேதியிலிருந்து எனது அனுபவத்திலும், பாத்தியத்திலும் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் 15.6.1988முதல் அனுபவித்து வருகிறேன். வாதி வாடகை தாரராகவும், நான் உரிமையாளராகவும் இருந்து 2.1.2015 தேதியில் வாடகை ஒப்பந்தம் எழுதிக்கொண்டோம் என்றால் சரிதான். அதில் 1-வது பார்ட்டி என்பதில் எனது கையெழுத்து என்றால் சரிதான். 2-வது பார்ட்டி என்பதில் வாதி கையெழுத்திட்டுள்ளார் என்றால் சரிதான். அன்றைய தினமே என்னிடம் ரூ.3500/- முன் பணமாக கொடுக்கப்பட்டு நான் வைத்துள்ளேன் என்றால் சரிதான்.

2. வாடகை ஒப்பந்த தேதியான 2.1.2015 முதல் இவ்வழக்கு தாக்கல் செய்யும் வரை வாதி வாடகை செலுத்தி வந்த நோட்டுதான் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 என்றால் சரிதான். இன்று வரை வாடகை தாரராக வாதி உள்ளார் என்றால் சரிதான். வாடகை பாக்கி எதுவும் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் 2-ம் பிரதிவாதி செல்வம் என்பவரின் மகனான ஜெகதீஸ்வரனுக்கு இந்த வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான். 2-ம் பிரதிவாதி என் மீது நில அபகரிப்பு தொடர்பாக ஏதேனும் புகார் கொடுத்தாரா என்றால் மாவட்ட காவல்குற்றப்பிரிவில் புகார் கொடுத்தார். தேதி ஞாபகம் உள்ளதா என்றால் தேதி ஞாபகம் இல்லை.

3. அந்த புகாரை விசாரித்தாரா என்றால் விசாரித்து உரிமையியல் நீதிமன்றத்திற்கு போகச்சொல்லிவிட்டார்கள். குற்றவியல் வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். 2-ம் பிரதிவாதியும், அவரது தகப்பனாரோ என் மீது இதுவரை உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. தாவா வழக்கில் 1,3-ம் பிரதிவாதிகளைப் பொறுத்து எந்த பரிகாரமும் கோரப்படவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

Taken down by me in open court read over/ interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.